**தொம்பே பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொம்பே பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொம்பே பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.6 | நடப்பு நிதியாண்டு காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல பெறுமதிகளுக்காகவும் முன்னைய சமமனான காலப்பகுதி தொடர்பாக இணக்கம் செய்யக்கூடிய தகவல்கள் ஒப்பீட்டளவில் வெளிப்படுததப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது விடயங்கள் வெளிப்படுத்தப்படும் என அறியத்தருகின்றோம். | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 10.22 | 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய 2155/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் இலக்கம் 227(vi) இன் பிரகாரம் கணக்கு காலப்பகுதியில் அறவிட முடியாத மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் பெறவேண்டியதாக பதிவதாயின் பெறுமதி மற்றும் பதிவதற்கு அங்கீகரித்த அதிகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பதியப்பட்டிருந்த ஆதன கடன் வட்டி ரூபா 278,766 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| 11.10 | நிகழத்தக்க பொறுப்புக்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கருங்கல் வியாபாரி ஒருவரால் 2020 நவம்பர் 12 ஆந் திகதி சபைக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,549,083 தொகையான நிலையான சொத்துக்களின் 07 விடயங்கள் காசுப் புத்தகத்தில் செலவு வைத்து செலவில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களை மூலதனமாக்குவதற்காக சொத்துக் கணக்கில் வரவு வைத்து செலவினத்தில் செலவு வைக்க வேண்டியிருந்த போதிலும் நாட்டுகுறிப்பு இலக்கம் 37 இன் மூலம் சொத்துக்கள் கணக்கில் வரவு வைத்து மீள்மதிப்பீட்டு கணக்கில் செலவு வைத்தமையின் காரணமாக மீளாய்வாண்டில் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | நிலையான சொத்துக்கள் சரியாக மூலதனமாக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிலுவையாக இருந்த கடை வாடகை மற்றும் நிலுவை வியாபார நிலைய வாடகைக்காக அறவிடப்பட்ட தண்டப்பணம் என்பன முறையே ரூபா 7,210 மற்றும் ரூபா 77,874 நிலுவை வாடகைக் கணக்கில் வரவு வைத்து மிகைக் கட்டண வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மிகைக் கட்டண செலவினக் கணக்கில் வரவு வைத்து நிலுவை வாடகைக் கணக்கில் செலவு வைத்தமை காரணமாக மீளாய்வாண்டில் நிலுவை வாடகை ரூபா 77,874 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | கணக்குகளை குறைத்து காண்பிக்கப்பட்டமை சரிசெய்யப்படல் வேண்டும். |
| (இ) நிலுவை கேள்வி வாடகைக்காக அறவிடப்பட்ட மிகைக் கட்டணம் ரூபா 74,701 தொகை நிலுவை கேள்வி வாடகை கணக்கில் வரவு வைத்து மிகைக் கட்டண வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிலுவை கேள்வி வாடகைக் கணக்கு செலவு வைத்து மிகைக் கட்டண செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக நிலுவை கேள்வி வாடகை அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | நிலுவைக் கேள்வி வாடகை கணக்கு குறைத்து காண்பிக்கப்பட்டமை சரிசெய்யப்படல் வேண்டும். |
| (ஈ) எதிர்வரும் வருடத்திற்கான ஆதனவரி கிடைப்பனவு ரூபா 911,337 மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் ஆதனவரி வருமானம் ரூபா 911,337 தொகை அதிகரித்தும் நிலுவை ஆதனவரி வருமானம் அப்பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | கணக்குகள் சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வில் பொதுக் களஞ்சிய இருப்பில் அகற்றப்பட்ட ரூபா 48,469 தொகையான இருப்பு பொது களஞ்சிய இருப்புக் கணக்கில் செலவு வைத்து இருப்பு அகற்றல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், இருப்புக் கணக்கில் வரவு வைத்து செலவினத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக பொதுக் களஞ்சிய இருப்புக் கணக்கு ரூபா 48,469 இனால் அதிகரித்தும் செலவினம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | இருப்புக் கணக்கு சரிசெய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 108,362,123 தொகையான மூலதன மானியங்களில் ஆண்டிற்குரிய அளவு உரிய பெறுமானத்தேய்வு சதவீதம் கணிப்பிடும் போது ரூபா 10,836,212 தொகை, மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்தினால் கையளிக்கப்படும் கணக்கில் மாற்றப்பட வேண்டிய போதிலும் மொத்த தொகையும் அக்கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 97,529,911 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | கணக்குகள் சரியாக செய்யப்படல் வேண்டும். |
| (எ) | முன்னைய ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,977,000 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | தொங்கல் கணக்கு மீதி ஏற்பட்டமைக்கான காரணத்தை பரீட்சித்து சரிசெய்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது இடர் முகாமைத்துவ அலகிலிருந்து நன்கொடையாக கிடைத்த ரூபா 850,554 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதியில் பெறுமானத்தேய்வு சதவீதத்தில் இனங்காணப்பட்ட வருமானம் ரூபா 94,909 வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை சமமான பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | தேவையான சீராக்கங்களை செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட மூலதன செலவினம் ரூபா 148,551,446 தொகை சொத்துக் கணக்கிற்கும், வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டத்தின் நடைமுறை வேலை கணக்கிற்கும் வரவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மொத்த தொகையும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | நடைமுறை வேலை மூலம் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் ஆரம்ப நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,749,948,436 இற்காக வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 37,558,615 ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மிகை அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகளில் சரிசெய்யப்படும். | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பெறுமானத் தேய்வு கணக்கை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 48,358,359 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களுக்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கிடையே ரூபா 18,240,268 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 187,187,134 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,560,194 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய 1493 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரதேச சபை அதிகாரப் பிரதேசமும் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு வரையிலும் ஆதனவரி 10729 மொத்த ஆதனங்களுக்காக மாத்திரமே அறவிடப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,257,081 நிலுவை ஆதனவரி மீதியில் 2022 சனவரி 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிலுவை ஆதனவரி மீதி 5-10 வருடங்களுக்கிடையே ரூபா 39,364 தொகையையும், 3-5 வருடங்களுக்கிடையே ரூபா 179,375 தொகையையும், 1-3 வருடங்களுக்கிடையே ரூபா | தொம்பே அதிகார எல்லை பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராம பிரதேசமாக வெளியிடப்பட்ட போதும் மிகவும் வறுமை மற்றும் குறைந்த வசதிகளுடன் அதிகமான பிரதேசங்கள் இருந்தமையால் ஒட்டுமொத்த அதிகாரப் பிரதேசத்திற்காகவும் ஆதனவரி விதிப்பதற்கு பொதுச் சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் சில கட்டங்களின் கீழ் ஆதனவரி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2020.12.31 இல் காணப்பட்ட நிலுவைத் | வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் ஆதனவரி விதிப்பதற்கும், நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 1,265,481 தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தொகையில் தற்போது வரையில் ரூபா 1,992,936 அறவிடப்பட்டுள்ளதுடன் அதில் அறவிட முடியாதிருந்த சில ஆதனங்களின் தொகையான ரூபா 160,383 இனை பதிவழிப்பதற்கு ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |

## 2.2 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள 37 தொலைபேசி கோபுரங்களில் கிடைக்க வேண்டிய ரூபா 110,000 வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை செலுத்துமாறு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 ஏக்கரில் சுகாதார கழிவுப் பொருட்கள் வைக்கப்படுகின்ற செயற்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்காக 2010 ஆகஸ்ட் 03 ஆந் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும், தொம்பே பிரதேச சபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் 1.5 நிபந்தனையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்ட நிலம் மற்றும் நிர்மாணங்கள் | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் முறையான கையளித்தல் தொம்பே பிரதேச சபைக்கு மேற்கொள்ளப்படாதிருந்த மையால் நேரடியாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கும், தொடர்புடைய ஏனைய திணைக்களங்கள் மற்றும் பிரதேசத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற | உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு கையளித்தல் வேண்டும். |

தொம்பே பிரதேச சபைக்கு முறையாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடைந்திருந்த போதிலும் அதனைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச சபையின் கழிவுகள் இந்த கழிவுப்பொருட்கள் குவிக்கப்படும் இடத்தில் கொண்டு போடப்படுவதுடன் இதற்காக டிரெக்டர் மற்றும் கம்பெக்டர் என 06 இயந்திரங்கள் மற்றும் 25 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 54,937,000 செலவினமொன்றை செயற்படுத்த வேண்டியிருந்ததுடன் மேலும் 06 வருடங்கள் அளவிலான காலத்திற்காக சபைக்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. கழிவு குவியலில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைய முடியாதிருந்தமையால் கையளிக்கும் இயலுமை காணப்படாதிருந்ததாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளரால் கையளிக்கப்படாமைக்கு காரணமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

உறுப்பினர்களுக்கும் உரிய தரப்பினர் முறையாக அறிவிப்பதற்கு தொம்பே பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இது தொடர்பாக ஆளுனர் மற்றும் உரிய உத்தியோகத்தர்களுடன் விசேட கலந்துரையாடல் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் போது நிரந்தர தீர்வொன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.